15.10.2025

**அ.வ.எண். 1075/2017**

**வா.சா.2 - பூபால சுப்பிரமணியம், த/பெ.**

Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 15.10.2025 is accordance with the provision of Act X of 3331

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். என்னிடம் காட்டப்படுவது என் தகப்பனாரும், என் பாட்டியும் எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் என்றால் சரிதான். **28.03.2014 தான செட்டில்மெண்ட் பத்திரம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி பத்திரத்தில் மூலப் பத்திரமாக 28.05.1979 தேதியிட்ட கிரய பத்திரம் வா.சா.ஆ.3 ஆக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் ஆவண எண்.880/1979 என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில், பழைய காலை எண் குறிப்பிட்டு ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றும், புதிய காலை எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ஆவணம் வைத்து எழுதப்பட்டுள்ளது.

2. பி.சா.ஆ.1 ஆவணப்படி செக்குபந்தி, முனியப்பன் காலியிடத்திற்கும் வடக்கு, ராமாத்தாள் வகையறா காலியிடத்திற்கும் கிழக்கு, கிழமேல் ரோட்டிற்கும் தெற்கு, அங்கன்னன் காலியிடத்திற்கும் மேற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அங்கன்னனிடமிருந்து தான் என் தாத்தா முத்துசாமி சொத்தை கிரயம் பெற்றார் என்றால் சரிதான். அந்த சொத்திற்கு தான் வழக்கு நடைபெறுகிறது என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்தானது வழக்கு சொத்திற்கு மேற்கு உள்ளது என்றால் சரிதான்.

3. பி.சா.ஆ.1 செட்டில்மெண்ட் என் தாத்தா இறந்த பின்னிட்டு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். என் தாத்தாவிற்கு, இந்த வழக்கில் வாதிகளான 1. ராமாயி, 2. முனியப்பன், 3. ரெங்கம்மாள், 4.வீரம்மாள், 5. முருகம்மாள் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். என் தாத்தா இறப்பிற்கு பின்னிட்டு, ஏற்பட்ட பத்திரம் என்பதால் ரங்கம்மாள், வீரம்மாள், முருகம்மாள் ஆகியோரிடம் கையொப்பம் பெறாமல் பி.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டதால் அது செல்லத்தக்கதல்ல

என்றால் அது எங்களது குடும்ப ஏற்பாடு. எங்களுக்குள் தானம் ஏற்படுத்திகொண்டோம். இதற்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தமில்லை.

4. பி.சா.ஆ.1 பத்திரத்தின் அடிப்படையில் தான் பட்டா மாறுதல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 பத்திரம் செல்லாத நிலையில் பட்டாவில் எனது பெயரை சேர்த்துள்ளது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 ஆவணம், வீராச்சாமி மகன் முத்துசாமி பெயரில் பட்டா எண்.1311 என்ற எண்ணில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் புதிய உட்பிரிவு எண்.569/9 ( பழைய புல எண்.409/2B2 பார்ட்) என குறிப்பிடப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆவணத்தில் பட்டா எண்.1311 ல் எனது பெயர் கூட்டாக பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. என்னிடம் காட்டப்படும் கணிணி சிட்டா, பட்டா எண்.1311 ற்குரியது என்றால் சரிதான். **மேற்படி கணிணி சிட்டா பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பி.சா.ஆ.2 ஆவணம் முனியப்பன் மகன் பூபால சுப்பிரமணியம், சதாசிவம் மனைவி புஷ்பா பெயரில் உள்ளது என்றால் தவறு. 2019 ம் ஆண்டுவரை எங்களது பெயரில் இருந்தது, பின்னிட்டு புஷ்பா பெயர் இடையே சேர்க்கப்பட்டுள்ளது. 2019 ம் ஆண்டுவரை எங்களது பெயரில் தான் இருந்தது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தனிப்பட்டா எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், முத்துசாமி பெயரில் உள்ள பட்டாவை மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பெயரில் தனியாக உள்ளது.

6. வா.சா.ஆ.3 ஆவணத்தை வள்ளியம்மாளிடம் இருந்து எனது தாத்தா கிரயம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்து கையொப்பம் செய்தவர் என்ற இடத்தில் முத்துசாமி என என் தாத்தா கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம், வழக்கிற்கான மூல ஆவணம் என்றால் சரிதான், மேற்படி சொத்தை என் தாத்தா, அங்கண்ணன் என்பவரிடம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்து கையொப்பம் செய்தவர்

என்ற இடத்தில் முத்துசாமி என என் தாத்தா கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ. 6 ஆவணம், பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த ஆவணத்தில் சார் பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்து கையொப்பம் செய்தவர் என்ற இடத்தில் முத்துசாமி என என் தாத்தா கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல, மேற்படி கையொப்பம் பக்கத்திற்கு, பக்கம் மாறுபாடு உள்ளது, அசல் ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும். என் தாத்தா 21.05.1992 ல் தகுந்த மறுபயன் பெற்று பிரதிவாதிக்கு கிரய பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றும், அது குறித்து கேள்வி எழுப்ப எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. அதில் உள்ள கையொப்பம் பக்கத்திற்கு, பக்கம் மாறுபாடு உள்ளது. 21.05.1992 தேதியில் சுவாதீனமும் என் தாத்தா பிரதிவாதிக்கு ஒப்படைத்துவிட்டார்என்றால் சரியல்ல. சொத்து எங்களுடைய சுவாதீனத்தில் தான் உள்ளது.

8. எனக்கு 43 வயதாகிறது. நான் மேற்படி கிரயம் ஏற்பட்டு சுமார் 32 ஆண்டுகள் ஆகிறது என்றால் சரிதான், எனக்கு அப்போது 10 வயது. என் தாத்தா உயிருடன் இருந்த வரையில் கிரய பத்திரம் செல்லாது என்று, வழக்கு தொடுக்கவில்லை என்றும், காவல் நிலையத்தில் புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவரிடம் தான் சொத்து உள்ளது. மேற்படி கிரயம் கொடுத்தது என் தாத்தாவிற்கு தெரிந்து அவர் மறுபயன் பெற்றுக்கொண்டதால் தான் என் தாத்தா எந்த வழக்கும் தொடுக்கவில்லை என்றும் காவல் நிலையத்தில் புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவர் புகார் கொடுக்க வேண்டியதில்லை.

9. எனக்கும், என் தகப்பனாருக்கும் கிரயம் பற்றி நன்கு தெரியும் என்றும், காலதாமதமாக இந்த வழக்கு செய்துள்ளேன் என்றால் 2014 ம் ஆண்டுவரை பிரதிவாதி வரவில்லை, அதற்கு பின்னிட்டு தான் கிரயம் பெற்றதாக பிரதிவாதியின் கணவர் சொன்னார். என் தகப்பனார், வழக்குரையில் சொல்லதவற்றை நான் சாட்சியத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருந்தபோது 1 மற்றும் 4 ம் வாதிகள் இறந்துவிட்டனர் என்றால்சரிதான். 1ம் வாதியின் வாரிசுகள்

இந்த வழக்கில் உள்ளனர் என்றும், 4ம் வாதியின் வாரிசுகளை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் எங்கு உள்ளார்கள் என்று தெரியவில்லை. அதனால் வழக்கில் சேர்க்கவில்லை. உரிய தரப்பினரை இந்த வழககில் சேர்க்காததால் எங்களுக்கு விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு மூல காரணமும், முகாந்திரமும் இல்லாத காரணத்தால் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur